# மட்டக்களப்பில் கலாசார மாற்றம்

பாகம் 51

ஊருக்குச் சென்றிருந்தவர்கள் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிலிருந்தும் சிலர் போயிருந்தார்கள். அங்கத்தைய நிலைமையை விசாரித்த போது எதுவும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாயில்லை. பிரயாணங்கள் தமிழ் முஸ்லீம் கலவரத்தால் அடிக்கடி தடைப்படுவது உட்பட தவறாது நாளும் நடக்கும் கொலைகளும் பதட்டமும் கிழக்கின் சுமுக வாழ்வைப் பாழடித்துக் கொண்டேயிருக்கின்றனவாம். போர் ஓய்ந்து போயிற்றென்று சொல்கிறார்கள். ஆனால் அங்கு அப்படியில்லை. போர் வேறோர் வடிவத்தில் அங்கு தொடர்கிறது.

ஜனநாயகம் நிலை நாட்டப்பட வேண்டுமென்றோ மக்களுக்கு அமைதி வாழ்க்கை திரும்ப வேண்டுமென்றோ அங்கு எதுவும் நடைபெறவில்லை. அரசியல் அதிகாரம் நிலைநாட்டப்படவும். அடக்குமுறையில் ஆட்சி செய்யவுமே முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. எல்லோருக்கும் தாமே ஆளவேண்டுமென்ற ஆசையை ஏற்படுத்தி தமிழரின் பாரம்பரிய பூர்வீக உரிமைகளை மறுத்து தமிழ் முஸ்லீம் இனங்களுக்கிடையிலான பிணக்குகளை உருவாக்கி எப்படியாவது கிழக்கைச் சிங்கள மயமாக்கி விடவேண்டுமென்ற சதி நோக்கோடுதான் சிங்கள மேலாண்மைவாதிகளால் காய்கள் அங்கு நகர்த்தப்படுகின்றன.

அதேவேளை, என்றுமில்லாதவாறு கிழக்கைத் தாமே ஆளவேண்டுமென்னும் ஆசை முஸ்லீம் தலைவர்களிடையே ஏற்பட்டிருக்கின்றது. கிழக்குவாழ் தமிழர்கள் நாதியற்றவர்கள் அரசியல் அநாதைகள் அவர்களை எப்படியாவது அடக்கியொடுக்கி சிங்கள ஆளும் வர்க்கத்தின் அனுசரணையுடன் ஆளப்படும் இனமாக ஆக்கிவிடவேண்டுமென்பதில் தமிழருக்கெதிரான சக்திகள் அங்கு அணிதிரள்கின்றன.

அப்பாவித் தமிழ் மக்களோ செய்வது இன்னதென்று அறியாது திகைத்துப் போயுள்ளனர். தமிழ்த்தேசியத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதா அல்லது தற்போது மாறியுள்ள சூழ்நிலையை ஏற்றுக்கொண்டு கிழக்கில் தங்கள் ஆட்சியதிகாரத்தை சூழ்நிலைகளுக்குத் தாக்குப் பிடித்து நிலை நிறுத்திக் கொள்வதா என்பதில் தமிழ் மக்களிடையே ஒருகுழப்பமான சூழ்நிலையே காணப்படுகின்றது.

தவிலுக்கு இரண்டு பக்கத்திலும் இடி என்பார்கள். அதுபோல முஸ்லீம் தீவிரவாதிகளின் இனவெறித்தாக்குதல்களாலும், பிரதேசத்தை சிங்களக் குடியேற்றத்தால் இழந்துவிடக்கூடிய ஆபத்தை எதிர் நோக்குவதாலும் கிழக்கு வாழ் தமிழர்களால் அரசியல் ரீதியில் எத்தகைய தீர்க்கமான முடிவுகளையும் எடுக்கமுடியாதுள்ளது. அவர்களின் உடனடித் தேவை அமைதி சமாதானம். அவர்களுக்கு மட்டுமென்ன எல்லாருக்குமே அதுதானே. அதை எப்படிப் பெறுவது? கிடைத்ததில் திருப்தி கண்டா அல்லது கனவுகளில் வாழ்ந்தா!

## அலசுவாரம்

அலசுபவர்: **மட்டைக்கிளப்பான்**

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த கிழக்கு மாகாணத்தில் ஏனைய இனத்தலைவர்கள் அரசியலைத் தம் ஆயுதமாக எடுத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கோ அரசியல் புறச்சக்திகளால் திணிக்கப்படும் ஒரு விவகாரமாகிவிட்டது. அவர்களை அவர்கள் பாட்டில் விட யாரும் தயாராக இல்லை. இது ஒரு மிகவும் ஆரோக்கியமற்ற நிலை. தமது அடையாளங்களை இழந்து வலிந்த பகுதி எதுவோ அதற்குள் அவர்கள் கரைந்து போய் விடக்கூடிய ஆபத்தான நிலையும்கூட. கொஞ்சம் கொஞ்சமாய் கிழக்குத் தமிழர்கள் தங்கள் மண்ணையும் தனித்துவ அடையாளங்களையும் இனிமேலும் பாதுகாத்துக் கொள்ள முடியாத அவலநிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் அலுத்த நிலையில் ராமன் ஆண்டாலென்ன ராவணனாண்டாலென்ன கூட இருந்த குரங்குதானாண்டாலென்ன என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுப் போய், நாளும் தொடரும் கொலைகளாலும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுட்பட அனைத்துக் குழுக்களாலும் உருவாக்கப்படும் பதட்ட நிலைகளாலும் தமது அன்றாட அலுவல்களைச் செய்து கொள்ள முடியாமல் பரிதவிக்கிறார்களாம்.

கடலைக் கலக்கிப் பருந்தின் கையில் கொடுப்பது போல என்பார்கள். இப்போது நடைபெறும் காரியங்கள் இதுதான் இனி நடைபெறப் போகின்றதோ என்னும் முன்முடிவுக்கே கட்டியம் கூறுகின்றன.

கிழக்கில் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்றுமில்லாத அளவு விஸ்வரூபமெடுத்து நிற்கின்றது. முன்பெல்லாம் கறுப்புத் துணிகளால் உடல்மறைத்து மட்டக்களப்பில் யாரும் இருந்ததில்லை. பள்ளிக் கூடங்களில் குழந்தைகள் மட்டுமே அத்தகைய சீருடைகளில் (யுனிபோம்) நடமாடுவார்கள். இப்போது இஸ்லாமியப் பிரதேசங்களெல்லாம் பர்தா அணிந்த பெண்கள் அதிக அளவில் நடமாடுகிறார்களாம். ஆண்களும் இஸ்லாமிய குல்லாவும் தொப்பியுமணிவதை முன்பைவிட அதிகம் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். முன்பிருந்த நிலையைவிட மேலதிகமாக தங்கள் இனத்துவ அடையாளங்களை எப்படியாவது காத்துக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தற்போதைய முஸ்லீம்கள் தள்ளப்பட்டுள்ளதற்கான காரணம் அங்குள்ள சூழ்நிலையாகத்தான் இருக்கமுடியும்.

தமிழ்நாட்டில் இத்தகைய உடைகளுக்கு இஸ்லாமிய மக்கள் வெகுகாலத்திற்கு முன்பிருந்தே பழக்கப்பட்டவர்களாய் இருந்திருக்கிறார்கள். ஆனால் இலங்கையில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் விசேடித்த இஸ்லாமிய உடைகளை முன்பு மக்கள் அதிக அளவில் அணியவில்லை. தற்போது மதத்தோடு தங்கள் பண்பாட்டையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் எழுச்சிபெற்று நிற்கிறார்கள். அது மிகவும் சிறப்பான விடயம். அவ்வவ் இனங்களின் தனித்துவ அடையாளங்கள் பேணப்படவும் வளர்த்தெடுக்கப்படவும் வேண்டும். தீவிர சமயப்பற்றும் கலாச்சார அபிவிருத்தியும் இனங்களுக்கு இன்றியமையாதவை. சமயங்கள் ஒருபோதும் தீயவற்றைச் சொல்லித்தரவில்லை. மனித நேயத்தையே அவை வலியுறுத்தி நிற்கின்றன. ஆனால் சமயம் இனரீதியாகச் சிந்திக்கத் தூண்டும்போதுதான் பிரச்சனைகள் ஆரம்பிக்கின்றன. கலை கலாச்சார வேறுபாடுகள் ஒரு பிரதேசத்தில் பல்வேறு இனங்களுக்கிடையே காணப்படுவது அச் சூழலின் அழகை அதிகரிக்கும். டைவேசிற்றி இஸ் பியூட்டி என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

ஆனால் கிழக்கில் தற்போது உள்ள நிலையில் இனமுரண்பாடுகளைக் கூர்மைப்படுத்துவதற்கான ஆயுதமாக அதாவது ஒருவகை இனத் தனிப்படுத்துகைக்கு உரிய ஆயத்தங்களாக மேற்கூறிய வகை நடை உடை பாவனை மாற்றங்கள் பாவிக்கப்படுகின்ற நிலை காணப்படுமாயின் அது சற்று நெருடலான விடயமாய் விடும்.

சமாதானமும் இனங்களின் கலாசார அபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று சமாந்தரமாக வளர்த்தெடுக்கப்படுமாயின் அதுவோர் மகிழ்ச்சியளிக்கக் கூடிய விடயமாகும். இனமுரண்பாடுகள் கூர்மைப்படுத்தப்படும் போது உருவாகும் இனங்களின் கலாசார மாற்றம் அல்லது அபிவிருத்தி இனங்களின் தனிப்படுத்துகைக்கே இட்டுச் செல்லும். இதனால் எதிர்காலச்சந்ததி இறுதியில் பலவிடயங்களிலும் வேறுபட்டு ஒரு சமாதானமில்லாத பகைப் புலச் சூழலுக்குள் நிரந்தரமாகத் தன்னையுட்படுத்தி விடவும் கூடும். இதில் எது நடக்கும் என்பதைக் காலம்தான் நமக்குக் கூற வேண்டும். இந்த விடயத்தைத் தீர்மானிப்பது மேற்கொண்டு செல்வது எல்லாமே தடையற்று நகரும் காலத்தின் கட்டாய மாற்றங்களேயன்றி வேறெதுவுமில்லை. நடக்க இருப்பது எப்போதும் நல்லதாகவே இருக்கும். ஏனெனில் அந்த நம்பிக்கையிலேயே இந்த உலகம் இதுவரை வாழ்ந்திருக்கின்றது. வாழவும் வேண்டும்.

*- தொடருவம்.*


**£100 முதலீட்டில் எவ்வாறு வியாபாரம் ஆரம்பித்தல்!**

*** FREE SHARE MARKET SEMINAR * இலவச பங்குச் சந்தை கருத்தரங்கு ***

**எங்களுடைய இலவச தமிழ் Share Market கருத்தரங்கில் (June 13th) வீட்டில் இருந்து தொலைபேசி மூலம் அல்லது Internet மூலம் எந்தப் பங்குகளை, எப்பொழுது, எவ்வாறு, எந்தத் தரகர்களை உபயோகித்து வாங்கி விற்பனை செய்து வரி செலுத்தாமல் எவ்வாறு இலாபம் அடையலாம் எனபதனை மிகச் சுலபமான முறையில் காண்பிக்க இருக்கின்றோம்.**

**பங்குகள் மட்டுமன்றி Sterling Pounds, Euro, Dollar, Gold, Oil என்பனவற்றையும் வாங்கி விற்பனை செய்யும் முறைகளையும் தெரியப்படுத்துவோம்.**

**முக்கிய குறிப்பு:**

**Nov 22ம் திகதி இடம்பெற்ற கருத்தரங்கில் நாம் குறிப்பிட்ட பங்கு மூன்று நாளில் 25% அதிகரிப்பு**

**March 17ம் திகதியும் June 2ம் திகதியும் பங்குச் சந்தை திருப்பு முனையை சரியாக அறிவித்தோம்.**

**உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்**

**07983 989 534**

**இதுவே எமது கடைசி கருத்தரங்கு**